பல்வேறு வேலைகளை எடுத்துக் கொண்டு இருப்பதால், அந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகராட்சிக்கு எப்போது தேர்தல் நடைபெறுகிறதோ அந்தக் காலத்திலேயே கோவை மாநகராட்சிக்கும் சேர்த்து தேர்தல் நடத்த இருக்கிறோம். ஆகவே, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (நேற்று (3-3-1983) கூடிய அலுவல் ஆய்வுக் குழு முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5-3-1983 (சனிக்கிழமை)	..	1983-84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல்.
6-3-1983 (ஞாயிற்றுக்கிழமை)	..	விடுமுறை.
7-3-1983 (திங்கட்கிழமை)	..	அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4]

8–3–1983 (செவ்வாய்க் கிழமை.) 9–3–1983 (புதன்கிழமை).	1983–84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.
10–3–1983 (வியாழக்கிழமை).	1. 1983–84 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்-பேரவைக்கு அளித்தல் (ஆளுநர் ஒப்புதலுக்குட்பட்டு). 2. 1983–84 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது விவாதமின்றி வாக்கெடுப்பு. 3. 1983–84 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 4. 1983–84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
11–3–1983 (வெள்ளிக்கிழமை)	1. முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். 2. 1983–84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
12–3–1983 (சனிக்கிழமை).	1983–84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
13–3–1983 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
14–3–1983 (திங்கட்கிழமை).	1983–84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.... இறுதி நாள்.
15–3–1983 (செவ்வாய்க் கிழமை). மற்றும் 16–3–1983 (புதன்கிழமை).	1983–84 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 1. கல்வி. 2. கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
17–3–1983 (வியாழக்கிழமை).	1. சமுதாய வளர்ச்சித்திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். 2. சாலைகளும பாலங்களும். 3. சாலைகள்-பாலங்சள் நித்த மூலதனச் செலவு.

[1983 மார்ச் 4

18–3–1983 (வெள்ளிக்கிழமை)	..	1. வேளாண்மை. 2. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
19–3–1983 (சனிக்கிழமை).	..	1. பாசனம். 2. பாசனம் குறித்த மூலதனச் செலவு.
20–3–1983 (ஞாயிற்றுக் கிழமை).	..	விடுமுறை.
21–3–1983 (திங்கட்கிழமை). மற்றும் 22–3–1983 (செவ்வாய்க் கிழமை).	..	1. மருத்துவம். 2. பொதுச் சுகாதாரம்.

5–3–1983, சனிக்கிழமையன்று பேரவை காலை 11-00 மணிக்குக் கூடும். மற்ற நாட்களில் பேரவை வழக்கம்போல் காலை 9-00 மணிக்குக் கூடும்.

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 201(3)-ன் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழ்க் கண்ட மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 1983-ம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்துள்ளார்கள்.

மானியக் கோரிக்கை எண்.	மானியக் கோரிக்கை விவரம்.
17	கல்வி
26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.
39	சாலைகளும் பாலங்களும்.
[illegible]	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.